admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

Vol: 04 | Issue: 010 | 4 Pages | 10.08.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 04 | இதழ்: 010 | 4 பக்கங்கள் | 10.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825









**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது**

**விளக்கம்:** நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

# த.வெ.க. அரசு தாக்கல் செய்த பொது, வேளாண்மை பட்ஜெட்டில் ‘வெற்றி’ பெயரில் 9 திட்டங்கள்



சென்னை, ஆக. 10

புதிய அரசுகள் பொறுப்பேற்கும்போது, முந்தைய அரசுகளின் திட்டங்களின் பெயர்களை மாற்றுவதும் அல்லது தங்களது கொள்கை அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் புதிய பெயர்களை சூட்டி பட்ஜெட்டில் அறிவிப்பதும் தமிழக அரசியலில் தொடர்ச்சியாக நடந்துவரும் ஒரு மரபாகவே பார்க்கப்படுகிறது.

'அம்மா' அந்த வகையில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பொதுமக்களுக்கு மலிவு விலையில் உணவு வழங்கும் திட்டம், உகந்த விலையில் மருந்தகங்கள், குடிநீர் மற்றும் சிமெண்டு, உப்பு வழங்கும் திட்டங்களுக்கு எல்லாம் 'அம்மா' என்ற பெயர் வைக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மாசிமெண்டு என்ற பெயரில் திட்டங்கள் உலா வந்தன. இதில் தற்போது அம்மா உணவகம் திட்டம் செயல்பாட்டில் இருந்து வருகிறது.

'கலைஞர்' அதேபோல், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 'கலைஞர்' என்ற பெயரில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதாவது, கலைஞர் கைவினைத் திட்டம், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம், கலைஞர்மகளிர்உரிமைத் தொகைதிட்டம்,கலைஞர் தலை மரக்கன்றுக்கள் நடும் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம் போன்றவையெல்லாம் மக்கள் திட்டங்களாக அரசால் அறிவிக்கப்பட்டன.

அந்த வரிசையில் தற்போது புதிதாக பொறுப்பேற்று இருக்கும் த.வெ.க. அரசும், அதுபோல ஒரு பெயரை முன்னிலைப்படுத்தி அரசு திட்டங்களில் முத்திரை பதிக்கத் தொடங்கியிருக்கிறது. அதன்படி, கடந்த 5 மற்றும் 6ந்தேதிகளில் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பொது மற்றும் வேளாண்மை பட்ஜெட்டுகளில் "வெற்றி" என்ற பெயரில் மட்டும் 9 திட்டங்களை அறிவித்து இருக்கின்றன.

வெற்றி ★ வெற்றி மடிக்கணினி திட்டம் ★ வெற்றி திறன் பயிற்சித் திட்டம் ★ வெற்றி தொழில் முனைவோர் திட்டம் ★ வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு திட்டம் ★ வெற்றி வீடு திட்டம் ★ வெற்றி 150 ★ வெற்றி விவசாயி விருது★ வெற்றிஇல்லத்தரசிவீட்டுத்தோட்டம்★ வெற்றி வான்மகள் திட்டம்இது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவை ஆகும். இனிவரும் நாட்களில் அரசு அறிவிக்கும்புதியதிட்டங்களிலும் இந்த பெயர் பிரதிபலிக்க அதிக வாய்ப்பு இருப்பதாகவே சொல்லப்படுகிறது.

## ஜப்பானில் பயன்படுத்திய பள்ளி நீச்சல் உடைகளை விற்பனை செய்ய திடீர் தடை: என்ன காரணம்?



டோக்கியோ, ஆக. 10

ஜப்பானில் பயன்படுத்திய பள்ளி நீச்சல் உடைகளை ஆன்லைன் வழியாக விற்பனை செய்ய திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் மிகப்பெரிய ஆன்லைன் விற்பனை நிறுவனம் மெர்காரி. இந்த நிறுவனம்மூலம்தனிப்பட்ட விற்பனையாளர்கள், புதிய மற்றும் பயன்படுத்திய பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்து வருகிறார்கள்.

மெர்காரி ஆன்லைன் நிறுவன சந்தையில் எந்தப் பொருட்களும் இல்லை என்ற நிலை இல்லை. அந்த அளவுக்கு அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. ஆனால்,அந்தநிறுவனம்திடீரெனபள்ளிகுழந்தைகள், மாணவர்கள் பயன்படுத்திய நீச்சல் உடையை விற்பனை செய்யமாட்டோம், அதற்கு அனுமதி இல்லை என்று கடந்த (ஆகஸ்டு) 3ந் தேதி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஜப்பான் பள்ளிகளில் ஆண்பெண் குழந்தைகள், மாணவர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கப்படுகிறது. உடற்கல்வி பாடமாகவே அது கற்பிக்கப்பட்டு வருகிறது. அதற்காக அணியும் நீச்சல் உடையை ஜப்பானிய மொழியில் 'ஸ்கூல் மிசுகி' என்று அழைக்கிறார்கள். இந்த உடையானது, பொதுவாக கருப்பு மற்றும் அடர் நீல நிறத்தில் எளிமையாக வடிவமைக்கப்படுகின்றன.

சிறுவர்களுக்கு அரைக்கால் சட்டைகளும், சிறுமிகளுக்கு 'ஒன்பீஸ்' நீச்சல் உடைகளும் அடங்கும். பெரும்பாலும் இதில் மாணவர் தங்கள் பெயரை எழுதுவதற்கான இடம் இருக்கும்; சில பள்ளிகளில் அந்தந்தப் பள்ளியின் சின்னமும் அச்சிடப்பட்டிருக்கும்.

மொத்தத்தில், பள்ளி நீச்சல் உடைகள் நாகரிகத்தைவிட பயன்பாட்டிற்கே முன்னுரிமை அளித்து வடிவமைக்கப்படுகின்றன. வேறு எந்த இடத்திலும் இந்த உடையை அணிவதை பார்க்க முடியாது.

இந்த ஆடைகளை எப்போதாவதுதான் அணிய வாய்ப்பு ஏற்படும் என்பதால், பல ஆடைகள் நல்ல நிலையிலேயே இருக்கும். அதற்குள் குழந்தைகளும் வளர்ந்துவிடுவதால் தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். சிக்கனமான குடும்பங்களை நடத்துபவர்கள், இதுபோன்ற பயன்படுத்திய ஆடைகளை விற்கவோ, வாங்கவோ இதுபோன்ற ஆன்லைன் சந்தைகளை நாடுகின்றனர். ஆனால், மெர்காரி ஆன்லைன் நிறுவனமோ, பயன்படுத்திய பள்ளி நீச்சல் உடைகளை விற்பனை செய்ய திடீர் தடை விதித்துள்ளது. அதற்கான காரணத்தை இலைமறை காயாக சொல்லியுள்ள அந்த நிறுவனம், "ஜப்பானிய மக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் பள்ளி நீச்சல் உடைகள் மீது ஆர்வத்தைக் கொண்டுள்ளனர். பள்ளிச் சீருடைகளைச் சிலர் எந்த மாதிரியான தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்களோ, அதே கண்ணோட்டத்தில்தான் பள்ளி நீச்சல் உடைகளையும் பார்க்கிறார்கள் என கூறப்படுகிறது.

இத்தகைய பொருட்களை வாங்க விரும்பும் நபர்களுக்கு, அந்தப் பள்ளி நீச்சல் உடைஏற்கனவேபயன்படுத்தப்பட்டிருப்பதுஒருமுக்கியஈர்ப்பாகஅமைகிறது. இதுபோன்றபரிவர்த்தனைகளைநாங்கள்ஒருபோதும்அனுமதிக்கமாட்டோம். தவறாக யாரும் விற்பனை செய்ய முயன்றால் அவர்களுடைய கணக்குகள் முடக்கப்படும்" என்று அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

## காங்கோ: பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 13 பேர் பலி



கின்ஷாசா, ஆக. 10

மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு காங்கோ. இந்நாட்டில் பல ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. அதேவேளை காங்கோவில் அல்கொய்தா, ஐஎஸ் உள்பட பல்வேறு பயங்கரவாத குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. பயங்கரவாத குழுக்கள் அவ்வப்போது பொதுமக்கள் மீதும் பாதுகாப்பு படையினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவங்களில் பலர் உயிரிழந்து வருகின்றனர். பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் காங்கோ பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், உகாண்டா எல்லை அருகே அமைந்துள்ள காங்கோவின் மாம்பசா மாகாணம் பனனா எகலி கிராமத்திற்குள் நேற்று புகுந்த ஐஎஸ் பயங்கரவாதிகள் பொதுமக்கள் மீது சரமாரி துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் பொதுமக்கள் 13 பேர் உயிரிழந்தனர்.

பின்னர், கிராமத்தில் உள்ள வீடுகளை சூறையாடிய பங்கரவாதிகள் வீடுகளில் இருந்த உணவு பொருட்கள், பணம் உள்ளிட்டவற்றை கொள்ளையடித்தனர். மேலும்,வீடுகளைதீவைத்துஎரித்துவிட்டுபின்னர்அங்கிருந்துதப்பிச்சென்றனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், பாதுகாப்புப்படையினர் விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தரங்கம்பாடி புனித தெரசா கன்னியர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம்



மயிலாடுதுறை, ஆக. 10

மயிலாடுதுறை புனித லூர்து மருத்துவமனைசார்பில், தரங்கம்பாடி புனித தெரசா கன்னியர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது.

முகாமிற்கு புனித தெரசா கன்னியர் இல்லத்தின் தலைமைப் பொறுப்பாளர் அருட்சகோதரி மெர்சி தங்கம் MA. Phd., அவர்கள் தலைமை வகித்தார். முகாமை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைஅருட்சகோதரிவெரோனிகா,MSWமேற்கொண்டார். மருத்துவ முகாமில் டாக்டர் அருட்சகோதரி டீனா, MS.OG கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.இம்முகாமில் புனித தெரசா விடுதியில் தங்கி பயிலும் மாணவிகள் உள்ளிட்ட தரங்கம்பாடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 150 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை, ரத்த அழுத்தம் (BP), ரத்தச் சர்க்கரை (Blood Sugar) உள்ளிட்ட அடிப்படை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மருத்துவ ஆலோசனைகளும், உடல்நலத்தைப் பேணுவதற்கான தேவையான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.பொதுமக்களிடையே நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்த பொதுமக்கள், புனித லூர்து மருத்துவமனை மற்றும் புனித தெரசா கன்னியர் இல்ல நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவித்தனர்.




தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையத்தில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா அவர்கள் விளாத்திகுளம் பேருந்து நிலையத்தில் இருந்து தவசலிங்கபுரம் மற்றும் கந்தசாமிபுரம் வரை செல்லும் பேருந்து நாகலாபுரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழியாக சென்றடையும் சேவையினை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் உள்ளார்.

## அகில இந்திய விளையாட்டு பெடரேஷன், 17 ஆவது அகில இந்திய கூடோ தற்காப்பு கலை போட்டி





புதுவை, ஆக. 10

மத்திய அரசின் இளைஞர் மற்றும் விளையாட்டு துறையின் அங்கிகாரம் பெற்ற கூடோ ஃபெடரேஷன் ஆஃப் இந்தியாஎன்றஅகில இந்திய விளையாட்டு பெடரேஷன், 17 ஆவது அகில இந்திய கூடோ தற்காப்பு கலை போட்டிகளை வரும் நவம்பர் மாதம் 12ம் தேதி முதல் 19ஆம் தேதி வரை புனேயில் நடத்த உள்ளது. அந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் புதுவை அணி வீரர்களை இன்று புதுவை மாநில கூடோ தற்காப்பு கலை சங்கம் , சங்க அலுவலகத்தில் தேர்வு செய்தது. மேலும் சிறப்பாக பங்குபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பெல்ட் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு புதுவை மாநில கூடோ தற்காப்பு கலை சங்க பொதுச் செயலாளர் சந்தோஷ் குமார் தலைமை தாங்கினார். மூத்த பயிற்சியாளர் மூர்த்தி நிர்வாகிகள் செல்வம், பாலச்சந்தர், செந்தில் வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுவை மாநில கூடோ சங்க தலைவர் வளவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்தி பேசினார்.

## மேட்டுப்பாளையம், சிறுமுகை வனப்பகுதிகளில் புலிகள் கணக்கெடுப்புக்காக கேமராக்கள் பொருத்தம்



மேட்டுப்பாளையம், ஆக. 10

மேட்டுப்பாளையம், சிறுமுகை வனப்பகுதிகளில் புலிகள் கணக்கெடுப்பு பணிக்காக 194 கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. கோவை வன கோட்டத்திற்கு உட்பட்ட மேட்டுப்பாளையம், சிறுமுகை வனப்பகுதிகளில் காட்டுயானை, காட்டெருமை, புலி, சிறுத்தை, கரடி, மான், செந்நாய், காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. உணவு மற்றும் தண்ணீர் தேடி அலையும் வனவிலங்குகள் வனப்பகுதிக்குள் இடம்பெயர்ந்து செல்வதை வழக்கமாக கொண்டு உள்ளன.

இந்த நிலையில் மேட்டுப்பாளையம், சிறுமுகை வனப்பகுதிகளில் அகில இந்திய புலிகள் கணக்கெடுப்பு 2026 (பேஸ்3) பணிகளுக்காக மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் பிரபு உத்தரவின் பேரில் 194 தானியங்கி கேமராக்கள் பொருத்தும் பணி தொடங்கியது.

மேட்டுப்பாளையம் வனச்சரகம் 9,300 ஹெக்டேர் பரப்பளவில் மேட்டுப்பாளையம், சுண்டப்பட்டி ஆகிய 2 பிரிவுகளில் 6 சுற்றுகளை உள்ளடக்கியது. மேட்டுப்பாளையம் வனச்சரக அலுவலர் சசிகுமார் தலைமையில் வனப்பணியாளர்கள் 6 குழுக்களாக பிரிந்து 94க்கும் மேற்பட்ட இடங்களில் தானியங்கி கேமராக்களை பொருத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுமுகை வனச்சரகம் 11,000 ஹெக்டேர் பரப்பளவில் பெத்திக்குட்டை, ஓடந்துறை ஆகிய 2 பிரிவுகளில் 6 சுற்றுகளை உள்ளடக்கியது. வனச்சரக அலுவலர் தினேஷ் தலைமையில் வனவர், வனக்காப்பாளர், வனக்காவலர், வேட்டை தடுப்பு காவலர்கள் உள்பட வனப்பணியாளர்கள் 6 குழுக்களாக பிரிந்து 50 இடங்களில் தானியங்கி கேமராக்களை பொருத்தும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். இந்த கேமராக்கள் பொருத்தப்பட்ட பிறகு அதில் பதிவான காட்சிகளை வைத்து புலிகள் கணக்கெடுக்கும் பணி நடைபெற உள்ளது.


# நெல்லையில் "போதை இல்லா கிராமம்" மாரத்தான் போட்டி: ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



திருநெல்வேலி, ஆக. 10

திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் ஆனந்த் மோகன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஷ்வேஷ் பா.சாஸ்திரி ஆகியோர் இணைந்து போதை இல்லா கிராமம்மாரத்தான்போட்டியைதொடங்கிவைத்தனர்.
திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி உட்கோட்டம், முன்னீர்பள்ளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர்மற்றும் ஆண், பெண், பொதுமக்கள் பங்கேற்ற "போதை இல்லா கிராமம்" மாரத்தான் போட்டி இன்றுகாலைநடைபெற்றது. 6கிலோமீட்டர் இந்த மாரத்தான் போட்டியானது தருவை இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் முதல் சுத்தமல்லி விலக்கு வரை 6 கிலோமீட்டர் தொலைவிற்கு நடைபெற்றது.
கலெக்டர், எஸ்.பி. தொடங்கி வைத்தனர்
இந்தநிகழ்ச்சியில்சிறப்பு அழைப்பாளர்களாககலந்து கொண்டதிருநெல்வேலிமாவட்டகலெக்டர்ஆனந்த் மோகன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஷ்வேஷ் பா.சாஸ்திரி ஆகியோர் இணைந்து மாரத்தான் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். மேலும் சேரன்மகாதேவி உட்கோட்ட டி.எஸ்.பி.யும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்
இந்த நிகழ்ச்சியில் பேசிய திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. தருவை கிராமத்தை "போதை இல்லா கிராமம்" என அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். மேலும் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிப்பதற்கு பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் போலீசார்ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார். ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு
போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டியில் 1,060 பேர்கலந்து கொண்டனர். இதில் 600 ஆண்கள், 400 பெண்கள் மற்றும் 60 போலீசார் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் மூலம் "போதைப்பொருளைதவிர்ப்போம்ஆரோக்கியமான சமுதாயத்தைஉருவாக்குவோம்" என்றவிழிப்புணர்வு பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

# திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோவிலில் ஆடிப்பூர விழா



திருக்கோவிலூர், ஆக. 10

திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோவிலில் ஆடிப்பூர திருவிழா நடைபெற்று வருகிறது.
கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் உள்ள பிரசித்தி பெற்ற வைணவ திருத்தலமான உலகளந்த பெருமாள்கோவிலில் ஆடிப்பூரபெருவிழா7நாட்கள் நடக்கிறது. விழாவின் முதல் நாளான நேற்று காலை 6.00மணிக்குமூலவர்பெருமாள்விஸ்வரூபதரிசனம், 7.30 மணி வரை நித்திய பூஜைகள் நடைபெற்றன. 10.00 மணிக்கு ஆண்டாள் கண்ணாடி அறையில் எழுந்தருளி அலங்கார திருமஞ்சனம், நான்காயிர திவ்ய பிரபந்த சேவை, தீபாராதனை, சற்றுமறை, பிரசாத விநியோகம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுவாமி ஆஸ்தானம் எழுந்தருளினார்.
விழாவின் நிறைவு நாளான 14ம் தேதி காலை ஆண்டாள் நாச்சியார் சமேத தேகளீச பெருமாள் தங்க பல்லக்கில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். மதியம் 12.00மணிக்குகண்ணாடி அறையில் சுவாமிக்கு விசேஷ திருமஞ்சனம், சிறப்பு அலங்காரத்தில், நூறு தடா அக்காரவடிசல் நைவேத்யமும், மாலை ஆண்டாள் நாச்சியார் சமேத தேகளீச பெருமாள் திருக்கல்யாண வைபவமும் நடக்கிறது.

# திமுக கூட்டணிக்குள் எம்.பி. ஆகி வசதிக்கு எஸ்கேப் ஆனவர் மாணிக்கம் தாகூர்: கனிமொழி சோமு தாக்கு



சென்னை, ஆக. 10

திமுக கூட்டணிக்குள் எம்.பி. ஆகி வசதிக்கு எஸ்கேப் ஆனவர் மாணிக்கம் தாகூர் என்று கனிமொழி சோமு தெரிவித்தார். "அரசியலில் யாரும் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தரநண்பனும்இல்லை; தமிழ்நாட்டுக்கு எது நல்லதோ அது எங்கிருந்து வந்தாலும் அதை ஆமோதிப்போம் பாஜகவுடன் நட்பு பாராட்டுகிறதா திமுக என்ற கேள்விக்கு திமுக முன்னாள் எம்.பி. கனிமொழி சோமு பதில் அளித்தார்.
இது குறித்து, மாணிக்கம் தாகூர் தனது தனது எக்ஸ் தள பதிவில்,
அப்படியா ...இப்பொழுது உண்மை வெளியே வருகிறது ஏன் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வரவில்லை என்பது என்று மாணிக்கம் தாகூர் தனது எக்ஸ் தள பதிவில் கூறினார்.
அதற்கு பதிலாடியாக கனிமொழி சோமு இது தொடர்பாக, தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்ததாவது: ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள்.. உங்கள் சோபா மாடல் முதலாளி பேப்பரைக்கூட படிக்காமல் சட்டமன்றத்தில் எங்கள் இளந்தலைவரிடம் கொட்டு வாங்கியதைப்போல, யார் மக்களவை, மாநிலங்களவையில் உறுப்பினராக உள்ளார்கள், யார் யார் பங்கேற்பார்கள் என்ற அடிப்படைஅறிவுதுளியும்இல்லாமல்திமுகழகத்தின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்த ஊருக்கு முன்பு கதறிக்கொண்டிருக்கிறீர்கள் தி.மு.கழக கூட்டணிக்குள் எம். பி. ஆகி வசதிக்கு எஸ்கேப் ஆன மாணிக்கம் தாகூர் சார். முதலில் நீங்களும் பேப்பரை படிக்க ஸ்டாட் பண்ணுங்க!
இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னை கொரட்டூரில் விமரிசையாக நடந்த அம்மன் கோவில் பால்குட ஊர்வலம்: 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்பு




சென்னை, ஆக. 10

சென்னை அடுத்த கொரட்டூரில் உள்ள பாடலாத்திரி சீயாத்தம்மன் கோவிலில் ஆடி மாதத் திருவிழா விமரிசையாக நடைபெற்று வரும் நிலையில், அம்மனின் தாய் வீடான கொரட்டூர் கருமாரியம்மன் கோவிலில் இருந்து பால்குடம் எடுத்து வரும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று பால்குடம் ஏந்தி, மேளதாளங்கள் முழங்க பக்தி பரவசத்துடன் ஊர்வலமாக சென்றனர். "ஓம் சக்தி பராசக்தி" முழக்கத்துடன் கொரட்டூர் ரெயில்வே சுரங்கப்பாதை முழுவதும் பெண்கள் பால்குடம் ஏந்தி அணிவகுத்துச் சென்றனர். சுமார் 4 கிலோமீட்டர் சுற்றி வந்த பால்குட ஊர்வலம், பாடலாத்திரி சீயாத்தம்மன் கோவிலில் நிறைவடைந்தது.

# ஆன்லைன் மோசடிகளுக்கு வங்கி கணக்கை வாடகைக்கு விட்டு கமிஷன்: தமிழகம் முழுவதும் 800 பேர் கைது

சென்னை, ஆக. 10

ஆன்லைன் மோசடிகளுக்கு வங்கிக் கணக்கை வாடகைக்கு விட்டதாக தமிழ்நாடு முழுவதும் 800 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் மற்றும் டிஜிட்டல் கைது மிரட்டல் மூலம் ஆன்லைன் வழியில் கோடிக்கணக்கில் பணம் பறிக்கப்படும் மோசடிகள் தொடர் கதையாகியுள்ளன. 'சைபர்' மோசடி செயல்களில் அபகரிக்கப்படும் பணம் பல்வேறு வங்கிக் கணக்குகளில் அனுப்பப்பட்டு எடுக்கப்படுகிறது. இத்தகையவங்கிகணக்குகள்மணிமியூல்அக்கவுண்ட் (Money Mule) என போலீசார் அழைக்கின்றனர். வங்கியில் இருந்த அந்த பணத்தை எடுத்து கொடுப்பதற்காககமிஷன்தொகைவழங்கப்படுகிறது. இந்தகமிஷன்தொகைக்குஆசைப்பட்டுஇளைஞர்கள் பலர் மோசடி செயலுக்கு உடந்தையாக இருந்து வருவதை சென்னை 'சைபர் கிரைம்' போலீசார் கண்டறிந்தனர். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சிறப்பு அதிரடி நடவடிக்கையில் சென்னையில் கடந்த 2 நாட்களில் 205 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் தமிழ்நாடு முழுவதும் மோசடி பணத்தை பதுக்கும் மணி மியூல் வங்கி கணக்குகள் தொடர்புடைய 800 பேரை சென்னை சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி, இந்த மோசடி தொடர்பாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 500க்கும் மேற்பட்டவர்கள் அந்தந்த மாவட்ட போலீசார் உதவியுடன்கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக தற்போது வரைகைது செய்யப்பட்டுள்ள 800 பேரிடம் போலீசாரின் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது

# பத்திரப்பதிவு முறைகேடுகளை தடுக்க கடும் நடவடிக்கை தேவை: தமிழக அரசுக்கு வானதி சீனிவாசன் வலியுறுத்தல்



சென்னை, ஆக. 10

தேசிய பாஜக மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:
திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நடைபெற்ற பத்திரப் பதிவு முறைகேட்டில் அடுத்தடுத்து திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வரும் நிலையில் தற்போது மீண்டும் பழனி ஆயக்குடி பகுதியில் கன்னிகா பரமேஸ்வரியம்மன் மடத்திற்குச் சொந்தமான ரூ. 2 கோடி நிலத்தினை ரூ.9 லட்சத்திற்கு பத்தரப்பதிவு செய்ததாகக்கூறப்படும்சம்பவம்அதிர்ச்சிஅளிக்கிறது. மேலும் பழனி கோவில் கட்டுப்பாட்டில் உள்ள தண்டபாணி மடத்திற்குச் சொந்தமான நிலம் முறைகேடான பதிவு புகாரில் சிக்கிய சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் என்பவர்தான் இந்நிலத்தினையும் பதிவு செய்ததாகக் கூறப்படுவது பேரதிர்ச்சி. இதுகுறித்து திண்டுக்கல் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர், பழனி பத்திரப் பதிவாளருக்கு குறிப்பிட்ட சர்வே எண்ணில் உள்ள நிலத்தினை பத்திரப்பதிவு செய்ய வேண்டாம் என அறிவுறுத்தியும் கடந்த மாதம் தனிநபருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டிருப்பது பத்திரப் பதிவுத்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்துள்ளது.
தற்போது அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் மயமாகிவிட்ட நிலையில், போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஒரு நிலம் பதிவு செய்யப்படுகிறது என்றால் அது நிச்சயம் பத்திரப்பதிவுத்துறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை. இதுபோல் தொடர்ந்து கோவில் நிலங்கள் தனிநபர்களின் பெயரில் நிலமோசடி செய்யப்பட்டு அபகரிக்கப்படுவது கடும் கண்டனத்திற்குரியது. பத்திரப்பதிவு துறையில் வெளிப்படைத் தன்மை இல்லாததும், சாமானிய மக்கள் எளிதில் அறிந்து கொள்ளாத வகையில் சில நடைமுறைகள் பின்பற்றப்படுவதும் இதுபோன்ற முறைகேடான செயல்களுக்கு வழிவகுக்கிறது.
எனவே தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை கோவில் நிலங்கள் அனைத்தையும் சிறப்புக் குழு அமைத்து ஆய்வு செய்து இதுபோன்ற முறைகேடுகள் நடந்திருக்கும் பட்சத்தில் உடனடியாக மீட்க வேண்டும். மேலும் மடத்திற்குச் சொந்தமான நிலங்களும் தனிநபர்கள் பெயரில் பத்திரப்பதிவு செய்வதைத்தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து கோவில் மற்றும் மடங்களின் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு ஆஸ்பத்திரிக்கு வந்த பெயிண்டர் நாயை போல தாவி தாவி ஓடியதால் பரபரப்பு



திருச்சி, ஆக. 10

அரசு ஆஸ்பத்திரிக்கு வந்த பெயிண்டர் நாயை போல தாவி தாவி ஓடியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. திருச்சியைச்சேர்ந்த 45வயதுமதிக்கத்தக்க ஒருவர் காரைக்காலில் தங்கியிருந்து பெயிண்டர் வேலை செய்து வந்தார். அவர் கடற்கரை சாலையில் சென்று கொண்டிருந்தபோது திடீரென வலிப்பு ஏற்பட்டு கீழே மயங்கி விழுந்தார். இதையடுத்து அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ்மூலம்காரைக்கால்அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆஸ்பத்திரி வளாகத்தில் ஆம்புலன்சில் இருந்து கீழே இறங்கியபோது. திடீரென அவர் நாய் போல் அங்கும். இங்குமாக தாவி தாவி ஓடினார். அப்போது அங்கிருந்த நாய் ஒன்று அவரை நோக்கி வந்து, அவருடன் விளையாடியது. இதனை அங்கிருந்தவர்கள் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பரவ விட்டுள்ளனர். தற்போது அது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது. காரைக்காலில் நாய் கடித்து சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதுபோன்று அவருக்கு நாய் கடித்ததால் இதுபோன்ற விபரீதம் ஏற்பட்டுள்ளதா? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "வெள்ளையனே வெளியேறு இயக்க வீரர்களை நினைவுகூர்வோம்" - எல்.முருகன்



சென்னை, ஆக. 10

வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற அனைத்து வீர ஆத்மாக் களையும் ஆழ்ந்த நன்றியுடன் நினைவுகூர்கிறோம் என எல்.முருகன் தெரிவித்துள்ளார். மத்திய இணைமந்திரி எல். முருகன் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: வெள்ளையனே வெளியேறு இயக்கம் ரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில்பங்கேற்றஅனைத்துவீரஆத்மாக்களையும் ஆழ்ந்த நன்றியுடன் நினைவுகூர்கிறோம். மகாத்மா காந்திஜியின் தலைமையால் உத்வேகம் பெற்ற "வெள்ளையனே வெளியேறு" என்ற முழக்கம், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்குப் புதிய வலிமையையும் உறுதியையும் ஊட்டியது. அது, காலனி ஆதிக்கத்தின் தளைகளை உடைத்து சுதந்திரம்அடையவேண்டும் என்ற நமது மக்களின் அசைக்க முடியாத உறுதியைப் பிரதிபலித்தது. அவர்களின்துணிச்சல், தியாகம் மற்றும் தேசபக்தி உணர்வு ஆகியவை இந்தியத் தலைமுறைகளுக்கு என்றென்றும் உத்வேகம் அளிக்கும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும்: வேலுமணி, விஸ்வநாதன் மீண்டும் போர்க்கொடி



சென்னை, ஆக. 10

சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும், அவர்களின்பேசிகட்சியைபலத்தப்படுத்தவேண்டும் என பழனிசாமிக்கு வேலுமணி, விஸ்வநாதன் ஆகியோர் இணைந்து கடிதம் எழுதி உள்ளனர். 42 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்
இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், நடந்து முடிந்த 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் முடிவுகளுக்கு பிறகு, அதிமுக பொதுச்செயலாளராகிய நீங்கள், கட்சியை வழிநடத்திச்செல்வதில்எடுத்ததவறானமுடிவுகளால், 47 சட்டமன்ற உறுப்பினர்களில், 25 சட்டமன்ற உறுப்பினர்கள், திமுகவுடன் இணைந்து ஆட்சி அமைப்பது தவறு என்பதை, சுட்டிக்காட்டினர். மேலும், 2021 சட்டமன்ற தேர்தலில் டிடிவி தினகரனுடன் கூட்டணி வைக்க மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அவர்கள் சென்னையில் நேரில் சந்தித்துவலியுறுத்தியும், ஓ.பன்னீர்செல்வம்அவர்கள் ஒத்துக்கொண்ட நிலையில் நீங்கள் அதை உதாசினப்படுத்தியதால் 42 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தோம். அன்று டிடிவி தினகரன் அவர்களுக்கு சீட் கொடுக்க வேண்டாம், என்று நிராகரித்தீர்கள். 2019ல் அஇஅதிமு.க தலைமையில் நாடாளுமன்ற தேர்தலை சந்தித்த போது, நம்மோடு கூட்டணியாக இணைந்து பயணித்த தேசிய முற்போக்கு திராவிட கழகம், புதிய தமிழகம் கட்சி மற்றும் தனி கட்சியாக இருந்த சரத்குமார் ஆகியோரை அரவணைக்காமல் 2021 சட்டமன்ற தேர்தலில் வெளியேற்றினீர்கள். நிர்வாகிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு
2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க டெல்லி தலைமை பலமுறை கூட்டணி வைக்க முயன்றும் கூட்டணியாக நம்முடைய அனைத்து கோரிக்கைகளையும் செய்வதாக கூறிய போதும் தன்னிச்சையாக முன்யோசனை இல்லாமல் செயல்பட்டதால் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி 40 தொகுதிகளில் வெற்றி பெற வலிய வாய்ப்பை வழங்கினீர்கள். அது மட்டுமில்லாது உங்களுடைய இந்த தவறான முடிவால் பல கழக வேட்பாளர்கள் 3வது இடத்திற்கு தள்ளப்பட்டு கோடிக்கனக்கான ரூபாய் இழந்து நிற்கிறார்கள். அதுபோன்று பா.ம.க கூட்டணிக்கு வர சம்மதம் தெரிவித்த போதும், ஒரு மாத காலம் அதை உறுதி செய்யாமல் காலதாமதம் செய்தகாரணத்தால்கூட்டணிவாய்ப்பைஇழந்தோம், இப்படி தேடிவந்த பா.ஜ.க., பா.ம.க போன்ற கட்சிகளின் கூட்டணி வாய்ப்புகளை தன்னிச்சையாக நிராகரித்தீர்கள். அதுபோன்று பா.ம.க கூட்டணிக்கு வர சம்மதம் தெரிவித்த போதும், ஒரு மாத காலம் அதை உறுதி செய்யாமல் காலதாமதம் செய்த காரணத்தால் கூட்டணி வாய்ப்பை இழந்தோம், இப்படி தேடிவந்த பா.ஜ.க., பா.ம.க போன்ற கட்சிகளின் கூட்டணி வாய்ப்புகளை தன்னிச்சையாக நிராகரித்தீர்கள். அதேபோல் நடந்து முடிந்த 2026 சட்டமன்றபொதுத்தேர்தலில்பலமுறைபிரம்மாண்ட கூட்டணி அமைப்பதாக தெரிவித்ததோடு, கூட்டணிக்கு நம்மை நாடி வந்த தே.மு.தி.க மற்றும் புதிய தமிழகம் கட்சிகளை நம்மோடு இணைத்துக் கொள்ளாமல் தன்னிச்சையாக வெளியேற்றிவிட்டீர்கள். குறிப்பாக தமிழக வெற்றிக் கழகத்துடன்கூட்டணிஅமைக்கும்வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்ளவில்லை. சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும்
அதனால், 2021, 2026 சட்டமன்ற பொது தேர்தல், 2024 நாடாளுமன்ற தேர்தல் ஆகிய 3 தேர்தல்களிலும் கழகம் வெற்றி பெற பிரகாசமான வாய்ப்புகள் இருந்தும், தாங்கள் எடுத்த தவறான தன்னிச்சையான முடிவுகளால், தொடர் தோல்விகளை சந்தித்து கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் மிகுந்த சோர்வை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டவர்களை அதே பொறுப்புகளில் நியமிக்க வேண்டும். சசிகலா, டிடிவி தினகரனிடம் பேசி கட்சியில் சேர்த்து கட்சியை பலப்படுத்த வேண்டும். 6 மாதத்தில் வர உள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு முன் அதிமுகவை பலபடுத்தியே ஆக வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு டெண்டர்களில் வெளிப்படைத்தன்மை: கட்டுமான பொருட்கள் விலை, தொழிலாளர் சம்பளபட்டியல் திருத்தி அமைப்பு

சென்னை, ஆக. 10
அரசு கட்டுமான பணிகளுக்கான டெண்டர்களில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவரும் வகையில், நியாயமான மற்றும் நடப்பு சந்தை விலைக்கு ஏற்ப கட்டுமானப் பொருட்கள், தொழிலாளர் சம்பளம் அடங்கிய விலைப்பட்டியல் திருத்தி அமைக்கப்படுகிறது.கட்டுமான பணிகள்



அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சார்பில்மேற்கொள்ளப்படும்கட்டுமானபணிகளுக்கு வெளிப்படையான, நியாயமான மற்றும் நடப்பு சந்தை விலைக்கு பொருத்தமான டெண்டர்களை ஈர்க்கும் வகையில், கட்டுமான பொருட்கள் மற்றும் தொழிலாளர் கூலிக்கான விலைபட்டியல் தற்போது திருத்திஅமைக்கப்பட்டுவருகிறது.விலைப்பட்டியல் இது அரசு கொள்முதல் விலைகளை நடப்பு சந்தை விலைகளுடன் ஒப்பிடுவதன் மூலம், அனைத்து துறைகளிலும் திட்டச்செலவுகளை குறைக்க இந்த நடவடிக்கை உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அந்தவகையில் பொதுப்பணிகளுக்கான கட்டுமான பொருட்கள் மற்றும் கூலி விவரங்களை நிர்ணயிக்கும் இந்த விலைப்பட்டியலை மறுஆய்வு செய்யும் பணியை பொதுப்பணித்துறைத் தொடங்கியுள்ளது.
இந்த விலைப்பட்டியல் ஆண்டுதோறும் திருத்தப்பட்டாலும், முந்தைய ஆண்டுகளில் சந்தை நிலவரங்கள் குறித்த விரிவான மதிப்பீடு இல்லாமல், முந்தைய ஆண்டின் விலைகளே தொடரப்பட்டோ அல்லது பெயரளவிலான உயர்வுகள் மட்டுமே வழங்கப்பட்டோ இருந்து வந்தன.நிபுணர்கள் குழு
தற்போது அந்த நிலையை முற்றிலும் மாற்றி, இதற்கானசந்தை விலை நிலவரங்களை ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது.
அந்தவகையில் பொதுப்பணித்துறையின் என்ஜினீயரிங் மற்றும் கட்டுமானப்பிரிவு நிபுணர்கள் குழுவின் மூலம் சிமெண்டு, இரும்பு, நீலக்கல், பி.வி.சி. பொருட்கள் மற்றும் இதர முக்கியப்பொருட்களின் சந்தை விலைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.
தச்சரின் தினக்கூலி
மேலும், துறை சார்ந்த அட்டவணைகளை இறுதி செய்வதற்கு முன்பு தொழிலாளர்கள் சம்பளமும் மறுஆய்வு செய்யப்பட உள்ளது.பொதுப் பணித்துறையின் தற்போதைய (அதாவது 202526ன்) விலைப்பட்டியலின்படி,தச்சரின்தினக்கூலிரூ.1,148, துப்புரவுப்பணியாளரின் கூலி ரூ.609 மற்றும் பெயிண்டரின் சம்பளம் ரூ.904 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.1,000 எண்ணிக்கை கொண்ட செங்கல் ரூ.7,887 ஆகவும், சிமெண்டு ஒரு டன் ரூ.5,602 ஆகவும், இரும்பு ஒரு டன் ரூ.55,664 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.திட்டங்களின் செலவு குறையும்
பொதுப்பணித்துறையின் நிபுணர் குழு ஒவ்வொரு துறையையும் தனித்தனியாக கலந்தாலோசித்து விலைப்பட்டியலை திருத்தும். இந்த பணிகள் நிறைவடைந்தவுடன் நல்ல முன்னேற்றம் இருக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. இந்ததிருத்தத்தின்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தும் உள்கட்டமைப்பு திட்டங்களின் செலவுகள் குறையும் என்றும் கூறப்படுகிறது.அதிகாரப்பூர்வ வெளியீடு
மேலும், விலைப்பட்டியலை முழுமையாக சார்ந்திராமல், சந்தை விலைகளைஒப்பிட்டுதுறைகள் டெண்டர்களை தயாரிக்க முடியும் என்றாலும், திருத்தப்பட்ட விலைப்பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டவுடன் அது அனைத்து டெண்டர்களுக்கும் பொதுவாக பொருந்தும் என்றும், அரசுக்கு கணிசமான சேமிப்பைத்தரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.மேலும் படிக்க

# பழனி, மதுரை கோவில் நில மோசடி விவகாரங்களில் உடனடியாக நடவடிக்கை: அமைச்சர் ரமேஷ்


ஸ்ரீரங்கம், ஆக. 10
ஸ்ரீரங்கத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது: ஸ்ரீரங்கம் கோவிலில் 21 கோபுரங்களில் ஒன்றான ஸ்ரீ தாமோதரகிருஷ்ண கோபுரம் பணிகள்2023ம்ஆண்டுதொடங்கப்பட்டு, பல்வேறு சூழல் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுதற்போதுநம்முடையஆட்சியில் பணிகள்முடிந்துமக்கள்பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது. அறநிலையத்துறையின் கவனத்திற்கு வராமல் பத்திரப்பதிவுகள் நடக்கிறது. அறநிலைத்துறை கவனத்திற்கு வந்த உடனே சட்டரீதியாக மற்றும் காவல் துறை ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழனி கோவில் நில விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சொத்து விவகாரம் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் 19 பேர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.d விவகாரத்தில் கடந்த திமுக ஆட்சியில் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?. தூங்கிக் கொண்டிருந்தார்களா?. கோவில் சொத்துக்களாக இருந்தாலும், கோவிலுக்கு தர்ம காரியங்கள் செய்வதற்காக கொடுக்கப்பட்ட அறக்கட்டளை சொத்துக்களாக இருந்தாலும் அது காப்பாற்றப்படும், இந்து சமய அறநிலையத்துறை கைவிடாது.



கோவில்களில் செல்போன்கள் அனுமதிக்கக் கூடாது என்ற உத்தரவு அமலில் உள்ளது, சமூக வலைதளங்களில் பல விடியோக்கள் வருவதைப் பார்க்கிறோம். கடந்தகால ஆட்சியில் அதனை செயல்படுத்தவில்லை,இதனால்கோவில் கருவறை விடியோகூட வெளிவருகிறது, முதல் நிலை கோவில்களில் செப்டம்பர் 1ம் தேதி முதல் அனைத்து செல்போன் கவுன்டர்கள் வைத்து பாதுகாப்பான முறையில் செல்போன்களை பாதுகாக்க கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல்கட்டமாகஅனைத்து முதல் நிலை கோவில்களில் செல்போன் கொண்டு செல்வதற்கான தடைகள் அமலுக்கு வரும். மனநிறைவுக்காக, கோவிலுக்குள் சாமிகும்பிட செல்லும்போது செல்போன் பயன்படுத்துவது தேவையற்ற ஒன்று, செல்போன்களை பயன்படுத்துவது, புகைப்படம் எடுப்பது, விடியோ எடுப்பது தேவையற்ற ஒன்று, இறைவனை தரிசிக்க செல்லும்போது எண்ணங்கள் இறைவன் மேல் இருக்க வேண்டும், என்ன பிரார்த்தனைக்கு வந்தோமோ, அதன் மேல் கவனம் இருந்தால் சிறப்பாக இருக்கும்.அதேநேரம் ஊடக மற்றும் பத்திரிகையாளர்கள், பிரபலங்கள் மற்றும் அமைச்சர்கள் வரும்போது, கோவிலுக்கு வெளியே பேட்டி மற்றும் விடியோ எடுத்துக் கொள்ளலாம். கோவிலுக்குள் அவர்கள் தரிசனத்திற்கு செல்வதை விடியோ எடுப்பதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவிலில் ஆடி திருவாதிரை விழா இன்று நடக்கிறது

அரியலூர், ஆக. 10
கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் கோவிலில் ஆடி திருவாதிரை விழா இன்று நடக்கிறது அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் கோவிலில் மாமன்னர் ராஜேந்திரசோழன் பிறந்தநாளான ஆடி திருவாதிரை விழா ஆண்டுதோறும் அரசு விழாவாக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை



வாயிலாக நடத்திட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இந்த ஆண்டிற்கான ஆடி திருவாதிரை அரசு விழா இன்று (திங்கட்கிழமை) கங்கைகொண்டசோழபுரம் பிரகதீஸ்வரர் கோவிலில் நடைபெற உள்ளது.இந்த விழாவில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி. ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். காலை 9.30 மணிக்கு மங்கல இசை நிகழ்ச்சியும், காலை 10 மணி முதல் 11 மணி வரை தொடக்க விழா நிகழ்ச்சியும், காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறஉள்ளன.மேலும்,திருவையாறுதமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவமாணவிகள் மங்கல இசை மற்றும் வீணை இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர். அரியலூர்மாவட்ட பள்ளி, கல்லூரி மாணவமாணவிகளின் பரதநாட்டியம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும், கலை பண்பாட்டுத்துறை, சுற்றுலாத்துறை, தென்னக பண்பாட்டு மையம் இணைந்து வழங்கும் கலை நிகழ்ச்சிகளும், மக்களிசை கலைஞர்களின் நையாண்டி மேளம், கரகாட்டம், கொம்பிசை, மரக்கால் ஆட்டம், பறையிசை, சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள்நடைபெற உள்ளன.
மேலும் ஆடித்திருவாதிரை விழாவில் கலந்துகொள்ளும்பக்தர்கள், பொதுமக்கள்உள்ளிட்ட அனைத்துதரப்பினரின் தேவைக்காக குடிநீர்வசதி, மின் விளக்கு வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு வசதிகள், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வந்து செல்லும் வகையில் சிறப்பு பஸ் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வரலாற்றுசிறப்புமிக்ககங்கைகொண்டசோழபுரத்தில் நடைபெறும் ஆடி திருவாதிரை விழாவில் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அரியலூர் மாவட்ட கலெக்டர் மிருணாளினி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி: புலி தாக்கி தொழிலாளி உயிரிழப்பு


நீலகிரி, ஆக. 10
நீலகிரி மாவட்டம், கூடலூர் ஓவேலி லாரஸ்டன் பகுதியை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன், 63. இவர் நேற்று, தண்ணீர் குழாயை சீரமைக்க தனியார் காபி தோட்டத்தை ஒட்டிய பகுதிக்கு சென்றார். ஆனால் இரவு வரை அவர் வீடு திரும்பவில்லை. உடனடியாக அப்பகுதியினர் இதுகுறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர்.தகவல் அறிந்து வந்த வன ஊழியர்கள்



மற்றும் அப்பகுதியினர் இன்று காலை பாலகிருஷ்ணனை தேடி வந்தனர். அப்போது அவர் உடலில் ரத்தக்காயங்களுடன் உயிரிழந்து கிடந்தது தெரிய வந்தது. புலி தாக்கியதால் அவர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. போலீசார் பாலகிருஷ்ணன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரித்து வருகின்றனர்.

# திருவள்ளூர்: கோவில் பூட்டை உடைத்து தாலி, உண்டியல் பணம் திருட்டு

திருத்தணி, ஆக. 10
திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம் சின்னம்மாபேட்டை கிராமத்தில் ரெயில் நிலையம் அருகே நாகாலம்மன் கோவில் உள்ளது.
இந்த கோவிலில் நேற்று முன்தினம் இரவு பூட்டை உடைத்து உள்ளே புகுந்த மர்ம நபர்கள், அம்மன் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த சுமார் 3 கிராம் எடை கொண்ட தாலியைதிருடினர். மேலும், கோவில் உண்டியலை உடைத்து அதில் இருந்த சுமார் ரூ.5 ஆயிரத்தையும் திருடிச் சென்றதாக கூறப்படுகிறது.
நேற்று காலை கோவிலுக்கு வந்த பொதுமக்கள், கோவில் பூட்டு உடைக்கப்பட்டு கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து கோவில் நிர்வாகி கோபிநாத், திருவாலங்காடு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.
அதன்பேரில், போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று



விசாரணை நடத்தினர். கோவிலில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை கைப்பற்றி திருட்டில் ஈடுபட்ட மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# குமரியில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 107 பேர் மீது வழக்குப்பதிவு.. எதற்கு தெரியுமா?

நாகர்கோவில், ஆக. 10
குமரி மாவட்டத்தில் போக்குவரத்து விதிகளை கடைபிடிக்க வேண்டும். விபத்து இல்லா குமரியை உருவாக்க வேண்டும் என போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின்பல்வேறுநடவடிக்கைகளைமேற்கொண்டு வருகிறார். இதற்காக போலீசாரின் கண்காணிப்பை தீவிரப்படுத்த அவர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி நாகர்கோவில் மாநகரில் நேற்று மது போதையில் வாகனம் ஓட்டியதாக 11 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதன்மூலம் கடந்த ஒரு வாரத்தில் மாவட்டம் முழுவதும் போலீசார் நடத்திய வாகன சோதனையில் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக 107 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப் பட்டுள்ளது. இதேபோல விதிகளை மீறி கனிம வளங்களை ஏற்றி சென்ற 34 டாரஸ் லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# தொகுதி மறுவரையறை மசோதாவின்போது திமுக வெளிநடப்பு செய்யப்போவதாக தகவல் : அமைச்சர் நிர்மல்குமார்

மதுரை, ஆக 10
மதுரையில் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார்செய்தியாளர்கள்சந்திப்பில் கூறியதாவது: அரசியல் காரணங்களுக்காகவே மத்திய அரசு தற்போது தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வருகிறது. இதன் மூலம் மக்கள் தொகை அடிப்படையில் தமிழகத்தின் எம்.பி. தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது.



இந்த காலகட்டத்தில் அவசியம் இல்லாமல் தொகுதி மறுவரையை கொண்டுவருகிறார்கள். இது சிறுபான்மை மக்களை ஒதுக்கும் செயல். எனவே, தமிழகத்தின் உரிமைகளைக் காக்க அனைவரும் ஒருங்கிணைந்து இந்த மசோதாவை எதிர்க்க வேண்டும். திமுக ஏற்கனவே பாஜகவோடு கைகோர்த்து அவர்களுக்கு ஆதரவாக தொகுதி மறுவரைவு மசோதாவிற்கு ஆதரவாக வெளிநடப்பு வாக்குறுதி கொடுத்திருப்பதாக தகவல் வருகிறது. முன்னதாக ஏப்ரல் மாதம் அவர்கள்தீர்மானம்கொண்டுவந்தார்கள், அந்த தீர்மானத்தின்படி, திமுக மொத்தமாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றால், மொத்தமாக எதிர்க்க வேண்டும்; மசோதாவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டும்; ஆனால் மறுவரைவு மசோதாவின்போது திமுக வெளிநடப்பு செய்யப்போவதாக தகவல் வருகிறது. அது தமிழகத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்தியாவிற்கே செய்யும் மிகப்பெரிய துரோகமாக இருக்கும். ஆட்சியில் இருந்தபோதும் எடுத்த முடிவுக்கும் இல்லாதபோது எடுக்கும் முடிவுக்கும் திமுக தனது குடும்பத்தை காப்பாற்ற ஒட்டுமொத்த தமிழக நலனையும் பாஜகவிடம் அடகு வைக்க பார்க்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# அரசு மருத்துவமனையில் அவலம்: துடைப்பத்துடன் நோயாளிக்கு சிகிச்சை அளித்த பெண் தூய்மை பணியாளர்

திருவண்ணாமலை, ஆக. 10
திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அரசு மருத்துவமனையில் நோயாளிக்கு பெண் தூய்மை பணியாளர் கையில்துடைப்பத்துடன்சிகிச்சை அளித்த வீடியோ வைரலாகி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் உள்ள அரசு மருத்துவமனையானது பல்வேறு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும்நோயாளிஒருவருக்கு அங்கு பணியாற்றிய பெண் தூய்மை பணியாளர் சிகிச்சை அளிப்பது போன்ற வீடியோ வைரலாகி வருகிறது.



கையில் துடைப்பத்துடன் மருத்துவமனையை சுத்தம் செய்து கொண்டிருந்த அந்த பெண் பணியாளர், நோயாளிக்கு கையில் குளுக்கோஸ் ஏற்றப்பட்ட சிரிஞ்சை சரி செய்வது போன்ற காட்சி அதில் இடம்பெற்றுள்ளது. நோயாளிக்கு உதவியாக இருந்த அவரது உறவினரே இதை செல்போனில் வீடியோவாக பதிவு செய்து வைரலாக்கியுள்ளார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கையில் துடைப்பத்துடன் சுத்தம் செய்து வந்த தூய்மை பணியாளர் சிகிச்சை அளித்துள்ள நிலையில் மேலும்இதுபோன்றசம்பவங்கள் நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது. இதனால் தொற்று பரவல் அதிகரித்து நோயாளி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.தலைமைடாக்டருக்கு தெரியாமல் இது எப்படி நடந்தது என்றுசமூகஆர்வலர்கள் சிலர் கேள்வி எழுப்பி உள்ளனர். மேலும் இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# தரிசாக கிடக்கும் வயல்கள் புத்துயிர் பெற வருண பகவான் கருணை கிடைக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

தஞ்சாவூர், ஆக. 10
காவிரி பாசன பகுதிகளுக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் குறிப்பிட்ட ஜூன்12ந்தேதிதண்ணீர் திறக்கப்பட வில்லை. மேட்டூர் அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து திருப்திகரமாக இல்லாததால் மேட்டூர் அணை தண்ணீர் திறக்கப்படவில்லை. காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுகளின் படி கர்நாடக அரசு தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை வழங்கவில்லை.



காவிரி டெல்டா மாவட்டங்களில் முழுமையாக குறுவை சாகுபடி செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆழ்துளை கிணறு வசதி உள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி மேற்கொண்டு அறுவடை செய்து வருகின்றனர். இயல்பாக மேட்டூர் அணை திறக்கப்பட்டு கால்வாய்களில் தண்ணீர் வந்து குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும் வயல்கள் தரிசாக கிடக்கின்றன. டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி இல்லாததால் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் ஒருபோக சாகுபடிக்காக தண்ணீர் வருமா என்று ஏக்கத்துடன் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். டெல்டா மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப கடந்த சில நாட்களாக கர்நாடக அணை களில் இருந்துதிறக்கப்பட்டதாககூறப்படும் உபரி நீர் மேட் டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்தது. இருப்பினும் அணைக்கு வரும் நீர்வரத்தானது குறைந்துள்ளது.
மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகமானது என்ற செய்தி வந்ததில் இருந்து டெல்டா விவசாயிகள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அந்த நம்பிக்கை கர்நாடகா அரசு இன்னமும் உபரி நீரை மட்டுமே தமிழகத்துக்கு தருகிறது. உரிமை நீரை தருவதற்கு மனமில்லை என்று பாசனபகுதி விவசாயிகள் கவலையோடு கூறுகிறார்கள். வானிலை ஆய்வாளர்கள் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக அறிவித்து வரும் நிலையில், மேட்டூர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை கொட்டித்தீர்த்து வருண பகவான் கருணை கிடைக்குமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

10.08.2026

# விருதுநகர் மேற்கு மாவட்டத்தை வலிமையான மாவட்டமாக உருவாக்குவோம்: அமைச்சர் கீர்த்தனா



சென்னை, ஆக. 10

த.வெ.க. அமைப்பு ரீதியாக 128 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். தற்போது நிர்வாக வசதிக்காக மேலும் 27 மாவட்டங்களை உருவாக்கி அதற்கு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை த.வெ.க. தலைவரும், முதல்அமைச்சருமான விஜய் நியமித்துள்ளார். அதன்படி, அமைச்சர் கீர்த்தனாவுக்கு விருதுநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டு ள்ளது. இது குறித்து தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது; மனமார்ந்த தமிழக வெற்றிக் கழகத்தின் விருதுநகர் மேற்கு மாவட்டத்தின் சார்பாக புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் எனது அன்புநிறைந்த மனமார்ந்த வாழ்த்துகள் என் மீது நம்பிக்கைவைத்து, இந்தப்பொறுப்பை வழங்கி, என்னை இன்னும் அதிகமாக உழைக்கத் தூண்டும் நம் கழகத் தலைவர், முதல்அமைச்சர் ஜோசப் விஜய்க்கும் கழகத்தின் வளர்ச்சிக்காக ஊக்கப்படுத்தி வழிகாட்டி வரும் நம் பொதுச்செயலாளர், ஊரகவளர்ச்சித்துறை மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் அன்பிற்கினிய ஆனந்துக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனமார்ந்த நன்றி

சிவகாசி தொகுதியைச் சேர்ந்த என் அன்பு கழகத் தோழர்கள், நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏற்றுக்கொண்டுள்ள இந்தப் பொறுப்பில் உங்கள் அன்பும், ஆதரவும், ஒற்றுமையும் எனக்கு என்றும் மிகப்பெரிய ஊக்கமாக இருக்கும். அண்ணன் வழங்கிய இந்த வாய்ப்பு எனக்கு ஒரு பொறுப்பு மட்டுமல்ல; இன்னும் அதிகமாக மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற உத்வேகம். அந்த நம்பிக்கையை காப்பாற்றி, விருதுநகர் மேற்கு மாவட்டத்தை கழகத்தின் வலிமையான மாவட்டங்களில் ஒன்றாக உருவாக்குவோம். நமது தலைவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையோடும், கழகத்தின் கொள்கை மற்றும் இலக்குகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் உறுதியோடும், ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் கழகத்தின் வலிமையை கொண்டு சேர்ப்போம். இது தொடக்கம் மட்டுமே...இனி இன்னும் பெரிய இலக்குகளை நோக்கி! உழைப்போம்... வெற்றி நிச்சயம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுமுறை தினம்: குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்



தென்காசி, ஆக. 10

சாரல் மழை காரணமாக குற்றால அருவிகளில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

குற்றால அருவி

தென்காசி மாவட்டத்தையொட்டி உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி களில் தற்போது சாரல் மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக மாவட்டத்தில் உள்ள முக்கிய நீர்வீழ்ச்சிகள், அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. முக்கிய சுற்றுலாத்தலமான குற்றால அருவிகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இன்று விடுமுறை என்பதால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலாபயணிகள் குற்றாலத்தில் குவிந்தனர். ஐந்தருவி, மெயின் அருவி பழைய குற்றால அருவிகளில் நீண்ட வரிசையில் நின்று குளித்து மகிழ்ந்தனர். உற்சாக குளியல் குற்றாலம் மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளில் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. இதனால் 'குளுகுளு' சூழலை அனுபவித்தவாறு சுற்றுலா பயணிகள் அருவிகளில் உற்சாகமாக குளியல் போட்டனர். அருவிகளில் குளித்த சுற்றுலா பயணிகள் அருவிக்கரை பகுதியில் உள்ள கடைகளில் தேநீர், தின்பண்டங்களை வாங்கி ருசித்தனர். இதனால் கடைகளிலும் வியாபாரம் சூடுபிடித்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (10.08.2026)

**மேஷம்** — சுறுசுறுப்பும் சுபச் செய்திகளும் தேடிவரும் நாள். நிலுவையில் இருந்த பணிகள் விரைவாக முடியும். நிதி நிலை சீராக இருக்கும்.

**ரிஷபம்** — குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். வியாபாரத்தில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த சாதகமான நாள். பேச்சில் நிதானம் தேவை.

**மிதுனம்** — உத்தியோகத்தில் எதிர்பாராத முன்னேற்றமும் பாராட்டும் கிடைக்கும். நண்பர்கள் வழியில் உதவி கிட்டும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்** — நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினருடன் செலவிடும் நேரம் மன அமைதியைத் தரும்.

**சிம்மம்** — தொழிலில் புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். புதிய முதலீடுகளைத் திட்டமிடலாம். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி** — திட்டமிட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். சகஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

**துலாம்** — சிந்தித்துச் செயல்பட வேண்டிய நாள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் வரவு செலவில் கவனம் தேவை. உணர்ச்சிவசப்படாமல் பொறுமையைக் கையாளுங்கள்.

**விருச்சிகம்** — முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த பண வரவு கைக்கு வந்து சேரும். சுப நிகழ்ச்சிகளுக்கான பேச்சுகள் சுமுகமாக முடியும்.

**தனுசு** — பணியிடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கலாம், ஆனால் உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்** — தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். சுபச் செய்திகள் வந்து சேரும்.

**கும்பம்** — புதிய முயற்சிகளில் கவனத்துடன் ஈடுபட வேண்டும். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. மாலையில் மன அமைதி தரும் சூழல் அமையும்.

**மீனம்** — பணிபுரியும் இடத்தில் நற்பெயரும் மதிப்பும் உயரும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். நிதி நிலைமை பலப்படும்.

# நிர்வாக வசதிக்காக த.வெ.க.வில் மேலும் 27 மாவட்டங்கள் உருவாக்கம்

சென்னை, ஆக. 10

த.வெ.க. அமைப்பு ரீதியாக 128 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். தற்போது நிர்வாக வசதிக்காக மேலும் 27 மாவட்டங்களை உருவாக்கி அதற்கு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை த.வெ.க. தலைவரும், முதல்அமைச்சருமான விஜய் நியமித்துள்ளார். அதன் விவரம் வருமாறு: மாவட்ட செயலாளர்கள் பட்டியல்: 1. விருதுநகர் மேற்கு அமைச்சர் கீர்த்தனா, 2. மதுரை வடக்கு கருப்பையா எம்.எல்.ஏ, 3. மதுரை மத்தியம் வி.எம்.எஸ். முஸ்தபா எம்.எல்.ஏ., 4. மதுரை கிழக்கு கார்த்திகேயன் எம்.எல்.ஏ., 5. புதுக்கோட்டை மேற்கு முன்னாள் அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர், 6. நாமக்கல் தென்கிழக்கு சந்திரசேகர் எம்.எல்.ஏ. 7. தேனி வடகிழக்கு சபரி ஐயங்கரன் எம்.எல்.ஏ. 8. தேனி தென்மேற்கு ஜெகநாத் மிஸ்ரா எம்.எல்.ஏ., 9. தூத்துக்குடி மத்தியம் அமைச்சர் ஸ்ரீநாத், 10. திருவள்ளூர் வடமேற்கு டாக்டர் அருண்குமார் எம்.எல்.ஏ., 11. திருப்பூர் தென்கிழக்கு முன்னாள் எம்.எல்.ஏ. சத்யபாமா, 12. திருப்பத்தூர் தெற்கு திருப்பதி எம்.எல்.ஏ., 13. நெல்லை தெற்கு டாக்டர் சதீஷ் கிறிஸ்டோபர் எம்.எல்.ஏ., 14. நெல்லை கிழக்கு முன்னாள் அமைச்சர் இசக்கி சுப்பையா, 15. திருச்சி புறநகர் தெற்கு நவல்பட்டு விஜி எம்.எல்.ஏ., 16. திண்டுக்கல் தென்மேற்கு அய்யனார் எம்.எல்.ஏ., 17. தர்மபுரி புறநகர் மேற்கு கஜேந்திரன் எம்.எல்.ஏ., 18. சேலம் மத்திய மேற்கு லட்சுமணன் எம்.எல்.ஏ., 19. சேலம் தெற்கு பழனிவேல் எம்.எல்.ஏ., 20. சென்னை தெற்கு அருள்பிரகாசம் எம்.எல்.ஏ., 21. செங்கல்பட்டு வடக்கு காமாட்சி எம்.எல்.ஏ., 22. செங்கல்பட்டு கிழக்கு எஸ்.குமரவேல், 23. கோவை கிழக்கு ஸ்ரீ கிரி பிரசாத் எம்.எல்.ஏ., 24. கிருஷ்ணகிரி தென்கிழக்கு இளையராஜா, 25. கரூர் தெற்கு சத்யா எம்.எல்.ஏ., 26. ஈரோடு புறநகர் மேற்கு முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயக்குமார், 27. ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டம் சண்முகன் எம்.எல்.ஏ. இவ்வாறு த.வெ.க. வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மின் இணைப்புக்கு விண்ணப்பித்த விவசாயிகளுக்கு இணைப்பு வழங்காமல் ஏமாற்றுவதா? அன்புமணி கேள்வி

சென்னை, ஆக. 10

தட்கல் திட்டத்தில் வேளாண் மின் இணைப்புக்கு விண்ணப்பித்த 60 ஆயிரம் விவசாயிகளுக்கு 8 மாதமாக இணைப்பு வழங்காமல் ஏமாற்றுவதா? என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது; தட்கல் திட்டத்தின்படி விண்ணப்பித்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் நிலத்தடி நீரைக்கொண்டு குறுவை சாகுபடி செய்திருப்பார்கள். ஆனால், மின்சார இணைப்பு வழங்கப்படாததால் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் உழவர்கள் பெரும் இழப்பை சந்தித்திருக்கிறார்கள். தட்கல் மின் இணைப்புக்காக 47,554 உழவர்கள் சேர்ந்து சுமார் ரூ.1250 கோடி முன்பணமாக செலுத்தியுள்ளனர். அவர்களுக்கு முன்பாக கடந்த 2023ஆம் ஆண்டில் இதே தட்கல் திட்டத்தில் விண்ணப்பித்த 12,566 உழவர்கள் ரூ.250 கோடிக்கும் கூடுதலாக முன்பணம் செலுத்தியுள்ளனர். விண்ணப்பித்த விவசாயிகள் எவரும் கோடீஸ்வரர்கள் இல்லை. அவர்களில் பெரும்பான்மையினர் வட்டிக்கு கடன் வாங்கி தான் முன்பணத்தை செலுத்தியுள்ளனர். அதற்காக வாங்கிய கடனுக்கு வட்டியும் செலுத்த முடியாமல், குறுவை சாகுபடி செய்ய முடியாததால் வருவாயும் ஈட்ட முடியாமல் பெரும் துயரத்தில் விவசாயிகள் ஆழ்ந்திருக்கின்றனர். அவர்களின் கடன் சுமை அதிகரித்திருக்கிறது. வேளாண் இலவச மின்சாரத்திற்கான இணைப்புக்காக 60,120 உழவர்களிடமிருந்து ரூ.1500 கோடியை வசூலித்திருக்கும் மின்சார வாரியம் மின் இணைப்பை வழங்க மறுப்பது பெரும் அநீதி ஆகும். தட்கல் திட்டத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு 15 நாள்களிலிருந்து 90 நாள்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பது விதியாகும். ரூ.1000 மின் கட்டணம் செலுத்தத் தவறும் விவசாயிகளின் மின் இணைப்பை உடனடியாக துண்டிக்கும் மின்சார வாரியம், அவர்களிடமிருந்து ரூ.1500 கோடியை வசூலித்து வைத்துக் கொண்டு 12,566 பேருக்கு 3 ஆண்டுகளுக்கு மேலாகவும், மீதமுள்ளவர்களுக்கு 8 மாதங்களாகவும் மின்சார இணைப்பு வழங்க மறுப்பது உழவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம் ஆகும். இதை நியாயப்படுத்த முடியாது. திமுக ஆட்சியில் தான் இலவச மின் இணைப்புக்காக உழவர்கள் காத்திருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்றாலும், அடுத்த சில வாரங்களில் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதால் தான் மின் இணைப்புகள் வழங்கப் படவில்லை என்று கூறப்படுகிறது. தேர்தலுக்குப் பிறகு தவெக அரசு பதவியேற்ற நிலையில், இலவச மின் இணைப்பு வழங்குவதற்கான பணிகளை தீவிரப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், திமுக அரசுக்குப் போட்டியாக தவெக அரசும் மின் இணைப்பு வழங்காமல் துரோகம் செய்திருக்கிறது. உள்ளிட்ட காரணங்களால் உழவர்கள் ஏற்கனவே பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களிடம் ரூ.1500 கோடி வசூலித்துக் கொண்டு மின் இணைப்பு வழங்காமல் அவர்களுக்கு கூடுதல் துயரத்தை அரசு வழங்கக் கூடாது. தட்கல் திட்டப்படி விண்ணப்பித்து காத்திருக்கும் 60,120 உழவர்களுக்கும் உடனடியாக வேளாண் இலவச மின் இணைப்பை வழங்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு எதிரான பயிற்சி ஆட்டம் இந்தியா வெற்றி




இலங்கைக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. அதற்கு முன்பு, இரு அணிகளும் தங்களுக்குள் ஒரு பயிற்சி ஆட்டத்தில் விளையாடின.

இந்த போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 363 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்ய, இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 357 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. இந்திய அணியைக் காட்டிலும் 6 ரன்கள் என்ற முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய இலங்கை அணி, இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 200 ரன்கள் எடுத்திருக்கையில் டிக்ளேர் செய்தது.

207 ரன்கள் எடுத்தால் வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது. இந்திய அணியில் அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரர்களான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 61 ரன்கள், ஷுப்மன் கில் 44 ரன்கள் எடுத்தனர். முகமது சிராஜ் 32 ரன்கள், ரிஷப் பந்த் 28 ரன்கள் எடுத்தனர்.

இந்தியா இலங்கை இடையேயான முதல் டெஸ்ட் போட்டி காலேவில் வருகிற 15ம் தேதி தொடங்குகிறது.

# டிஎன்பிஎல் ஜெகதீசன் அபார ஆட்டம்... திண்டுக்கல்லை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்த சேப்பாக்




சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி திண்டுக்கல்லை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது.

10வது டிஎன்பிஎல் டி20 கிரிக்கெட் தொடர் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் எம்.பி.ஆர். கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் இன்று நடைபெற்ற 9வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் திண்டுக்கல் டிராகன்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டிக்கான டாஸை வென்ற சேப்பாக் சூப்பர் கில்லீஸ் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த திண்டுக்கல் வீரர்கள் சேப்பாக் அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 126 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 127 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சேப்பாக் களமிறங்கியது. தொடக்கத்தில் விக்கெட்டை இழந்தாலும், நாராயண் ஜெகதீசன் அதிரடியாக விளையாடி 58 பந்துகளில் 90 ரன்கள் குவித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார்.

இறுதியில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி 16.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 131 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதன் மூலம் திண்டுக்கல் டிராகன்ஸ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி சேப்பாக் சூப்பர் கில்லீஸ் முதல் வெற்றியை பதிவு செய்தது.

# காமன்வெல்த் போட்டியில் 39 பதக்கங்கள் வீரர்களை வாழ்த்தி ரீல்ஸ் வெளியிட்ட பிரதமர் மோடி



ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 23வது காமன்வெல்த் விளையாட்டு போட்டியில், இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம் என மொத்தம் 39 பதக்கங்கள் குவித்து 4வது இடத்தை பிடித்தது. பதக்கங்களை வென்று இந்தியா திரும்பிய வீரர்களுக்கு டெல்லி விமான நிலையத்தில் மாலை அணிவித்து, வாத்தியங்கள் முழங்க பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பதக்கம் வென்ற வீரர்களை நேரில் அழைத்து பாராட்டிய மத்திய விளையாட்டுத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா, மத்திய அரசு சார்பில் தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா ரூ.30 லட்சமும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா ரூ.20 லட்சமும் ஊக்கத்தொகையாக வழங்கினார்.

இந்நிலையில், பிரதமர் மோடி காமன்வெல்த் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும், வீரர்களுடன் ரீல்ஸ் வீடியோ எடுத்து அதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பிரதமர் மோடி பதிவேற்றியுள்ளார். அதில், 'பாரதத்திற்கு எப்போதும் ஊக்கமளிப்போம்' என்று மோடி கூறியுள்ளார்.


# 'மகுடம் படத்தில் முதல் முறையாக இதை செய்துள்ளேன்' நடிகை அஞ்சலி



'மகுடம்' படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் பேசிய நடிகை அஞ்சலி, இந்த படத்திற்காக முதல் முறையாக சண்டைக் காட்சிகளில் நடித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வரும் விஷால், தற்போது 'மகுடம்' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி உள்ளார். விஷால் இயக்கி நடிக்கும் இப்படத்தில் துஷாரா விஜயன் கதாநாயகியாக நடிக்கிறார். நடிகை அஞ்சலி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இப்படம் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், படத்தில் விஷால் மூன்று வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனத்தின் 99வது படமாக 'மகுடம்' உருவாகியுள்ளது. இப்படத்தின் மூலம் விஷால் இயக்குநராகவும் தனது புதிய பயணத்தை தொடங்கியுள்ளார். படம் வருகிற 14ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதையொட்டி நேற்று வெளியான படத்தின் டிரெய்லர் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. சமூக வலைதளங்களிலும் டிரெய்லர் கவனம் பெற்று வருகிறது. இந்த நிலையில், 'மகுடம்' படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் நடிகை அஞ்சலி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது; "எனது நெருங்கிய நண்பர் விஷால் முதல் முறையாக ஒரு படத்தை இயக்கியுள்ளார். இந்த படம் வெற்றியடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். தயாரிப்பாளர் ஆர்.பி.சவுத்ரி இன்று நம்முடன் இல்லாவிட்டாலும், இந்த படத்தின் வெற்றியால் நிச்சயம் அவர் மகிழ்ச்சி அடைவார். இந்த படத்தில் அன்னபூரணி என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். நான் இதுவரை நடித்த படங்களில் எனக்கு மிகவும் பிடித்த கதாபாத்திரங்களின் வரிசையில் அன்னபூரணியை சேர்த்துக் கொள்வேன். அந்த அளவிற்கு மிகவும் அழகான ஒரு கதாபாத்திரம். அதோடு தமிழ் சினிமாவில் எனது திரைப்பயணத்தில் முதல் முறையாக இந்த படத்தில் சண்டைக் காட்சிகளில் நடித்துள்ளேன். படத்தின் பாடல்கள் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றுள்ளன. இந்த படம் விஷாலுக்கு வெற்றிப்படமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# உலகையே திரும்பிப் பார்க்க வைத்த நோலன்... 1 பில்லியன் வசூலை கடந்த 'தி ஒடிஸி'




உலகம் முழுவதும் அரங்கம் நிறைந்த காட்சிகளாக ஓடிவரும் இப்படம், தற்போது 1 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.9,500 கோடி) வசூலை கடந்து சாதனை படைத்துள்ளது.


ஹாலிவுட்டின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான கிறிஸ்டோபர் நோலன் இயக்கத்தில் கடந்த 17ந் தேதி வெளியான திரைப்படம் 'தி ஒடிஸி'. கிரேக்க இலக்கியத்தின் புகழ்பெற்ற காவியமான 'ஒடிசி'யை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள இப்படம், டிரோஜன் போரில் பங்கேற்ற மன்னன் ஒடிசியஸ் தனது நாட்டுக்கு திரும்பும் பயணத்தில் எதிர்கொள்ளும் சவால்களை கதைக்களமாக கொண்டுள்ளது. சுமார் 250 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது இந்திய மதிப்பில் ரூ.2,500 கோடி பட்ஜெட்டில் இப்படம் உருவாகியுள்ளது.

இதில் டாம் ஹாலண்ட், ஆன் ஹாத்வே, ஜெண்டயா உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான 'தி ஒடிஸி', முதல் ஒரு வாரத்திலேயே சுமார் 364 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது ரூ.3,500 கோடிக்கு மேல் வசூலித்தது. தொடர்ந்து உலகம் முழுவதும் அரங்கம் நிறைந்த காட்சிகளாக ஓடிவரும் இப்படம், தற்போது 1 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.9,500 கோடி) வசூலை கடந்து சாதனை படைத்துள்ளது.

இதன்மூலம் கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய 'தி டார்க் நைட்', 'தி டார்க் நைட் ரைசஸ்' ஆகிய படங்களை தொடர்ந்து, அவரது மற்றொரு திரைப்படமான 'தி ஒடிஸி'யும் 1 பில்லியன் டாலர் வசூல் கிளப்பில் இணைந்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் 'ஸ்பைடர்மேன்: பிராண்ட் நியூ டே', 'டாய் ஸ்டோரி 5', 'சூப்பர் மரியோ கேலக்ஸி' உள்ளிட்ட படங்களும் 1 பில்லியன் டாலர் வசூலை கடந்துள்ளன.

# "ஏன் காவி நிற ஆடை அணிந்துள்ளீர்கள்?".. நடிகை பிரியா வாரியரிடம் செய்தியாளர் சர்ச்சை கேள்வி



விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் பிரியா வாரியர் காவி நிற உடையில் கலந்து கொண்டார். அப்போது அங்கு இருந்த செய்தியாளர் ஒருவர், "ஏன் காவி நிற ஆடை அணிந்துள்ளீர்கள்? கேரளாவில் விடுக்கப்பட்டுள்ள ஆரஞ்சு அலர்ட் காரணமா?" என கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது. மலையாளத்தில் வெளியான 'ஒரு அடார் லவ்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி, தனது கண் சிமிட்டும் காட்சியால் இந்திய அளவில் பிரபலமானவர் நடிகை பிரியா வாரியர். தொடர்ந்து மலையாளம் மட்டுமின்றி இந்தி, கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிப் படங்களிலும் நடித்து வருகிறார். தமிழில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியான 'குட் பேட் அக்லி' படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். பிரியா வாரியர் சமூக வலைதளங்களில் தொடர்ந்து புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பகிர்ந்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார். திரைப்படங்களைத் தொடர்ந்து விளம்பரங்களிலும் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் பிரியா வாரியர் காவி நிற உடையில் கலந்து கொண்டார். அப்போது அங்கு இருந்த செய்தியாளர் ஒருவர், "ஏன் காவி நிற ஆடை அணிந்துள்ளீர்கள்? கேரளாவில் விடுக்கப்பட்டுள்ள ஆரஞ்சு அலர்ட் காரணமா?" என கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

செய்தியாளர் கேட்ட கேள்வியால் சற்று சங்கடமடைந்த பிரியா வாரியர், அதற்கு தெளிவாக பதிலளித்தார். "இந்த நிறுவனத்தின் பிராண்ட் நிறம் காவி. அதற்கு ஏற்ப நான் இந்த ஆடையை தேர்வு செய்தேன்" என்று அவர் கூறியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பிரியா வாரியரிடம் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு நெட்டிசன்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்து, சமூக வலைதளங்களில் தங்களது கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.